சுருளியாறு பகுதில் மின் வாரியத்திற்குச் சொந்தமான பொருடகள் களவு போவதைத் தடுக்கும் திட்டம்

*வினா எண். 123— திரு. ரா. கிருஷ்ணன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:—

(அ) சுருளியாறு, லோயரில் மின் வாரியத்திற்குச் சொந்த மான இரும்பு, சிமெண்ட் தகடுகள் களவு போயிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) களவு போவதை தடுக்கும் தொழிலாளர்கள் தாக்கப் படுவதும் மிரட்டப்படுவதும் உண்மையா ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி மின் வாரியத்திடம் தகவல் ஒன்றும் கிடைக்கப் பெறவில்லை.

(இ) களவு போவதுபற்றிக் காவல்துறைக்குப் புகார் கொடுக் கப்பட்டு பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

திரு ஆர். டி. கோபாலன்: எந்த ஆண்டிலிருந்து களவு போக ஆரம்பமானது ? இந்தக் களவு சம்பந்தமாக நான் அமைச் சருக்குப் புகார் கொடுத்து எழுதியிருந்தேன். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்தப் பொருள்கள் களவு போயின. புகார் களின் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சில பேர் தண்டனைக் குள்ளாகியிருக்கிறார்கள். சில பேர் சாமர்த்தியமாக விடுவித்துக் கொண்டார்கள்.

மாவட்டத் தலைநகரங்களிலும் பெரு நகரங்களிலும் கலை அரங்கங்கள் கட்டும் திட்டம்

*வினா எண் 124— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாவட்டத் தலைநகரங்களிலும் பெரு நகரங்களிலும் அரசே நாடகக் கலையரங்கங்கள் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாவட்டத்தின் தலை நகர் அல்லது முக்கிய இடத்தில் கலை அரங்கம் கட்டுவது பற்றிய கருத்துரு பரிசீலிக்கப்படுகிறது.

திரு.கூ. பாலன்: சென்னை நகரில் தியேட்டர் கட்டுவது பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எத்தனை தியேட்டர்கள் இதுவரை கட்டப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அது மாநகராட்சி, நகராட்சிகளின் சார்பில் கட்டப்படுவது. அதுபற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தக்